1986-ம் புத்தாண்டு
ஆனந்தா திருக்குறட் கலண்டருடன் மலர்கிறது.
ஆதரவாளர்களுக்கு எமது அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்!
ஆனந்தா புத்தகசாலை
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22343

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=

1986-ம் புத்தாண்டு
ஆனந்தா திருக்குறட் கலண்டருடன் மலர்கிறது.
ஆதரவாளர்களுக்கு எமது அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்!
ஆனந்தா புத்தகசாலை
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22348

ஏடு:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு மார்கழி மீ 15 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 17 (30-12-1985) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:- 34

# இனப்பிரச்சினையை தீர்க்க இந்தியா உதவுவது உறுதி

## கடைசி நேரம் காங்கிரஸ் தீர்மானத்தில் இணைப்பு

புதுடில்லி, டிச. 29

**இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திரா காங்கிரஸ் தொடர்ந்து உதவும என உறுதி அளித்துள்ளது.**

**அதே வேளை இப்பிரச்சினை சுமுகமான முறையில் இதுவரை தீர்த்து வைக்கப்படாமல் இருப்பது குறித்துக் கவலையும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்தியக் காங்கிரஸ் கட்சியின் நூற்றுண்டு விழாத் தீர்மானத்தில் இந்த வாசகங்கள் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப் பட்டுள்ளன.

இந்தியக் காங்கிரஸ் கட்சியின், நூற்றுண்டு விழா முக்கிய மாநாடு நேற்றும், இன்றும் (சனி ஞாயிறு) பம்பாயில் நடந்தது.

அங்கு நூற்றுண்டு விழாத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானததில் இலஙகை சம்பந்தமான பின்வரும் வாசகம் சேர்க்கப்பட்டிருந்தது.

இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திரா காங்கிரஸ் தொடர்ந்தும் உதவும் என உறுதி அளிப்பதோடு—

அண்டை நாடான இலங்கையில் அமைதியான சூழ்நிலை உருவாக வேண்டும என்றும்—

இலங்கைத் தமிழ்அகதிகள் கௌரவத்துடனும், பாதுகாபபுடனும் தங்கள் நாட்டில உள்ள தமது வீடுகளுக்குத் திரும்புப சூழ் நிலை வரும் என எதிர்பார்ப்பதாகவும—

இதுவரை இப்பிரச்சினைகுத் தீர்வு காணப்படாமல் இருப்பது குறித்து காங்கிரஸ் கவலையும, கண்டனமும் தெரிவிப்பதாகவும — அத்தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நூற்றுண்டுத் தீர்மானம் காங்கிரஸின் காரியக் கமிட்டியினுல் அங்கீகரிக்கப்பட்ட போது இலங்கை சம்பந்தமான வாசகம் எதுவும் அதில் இருக்கவில்லை.

நேற்றுக் கடைசி நேரத்தில் காங்கிரஸ் தலைவர்கள் சுமார் 4 மணி நதியாலங்களாக ஆலோசனை நடத்திய பின்னரே முன் கண்ட வாசகங்கள் சேர்க்கப்பட்டன.

நூற்றுண்டுத் தீர்மானம் மாநாட்டில் வாசிக்கப்பட்டபோது இலங்கை விஷயமும் சேர்த்து வாசிக்கப்பட்டது.

இந்தியக் காங்கிரஸ் மாநாட்டில் இ. தொ. கா. சார்பில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், திரு. எம். எஸ். செல்லச்சாமி, திரு. ஜெயா பெரிசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அமைச்சர் எம். எச். முகம்மது, ஐ. தே க. தலைவர் ஹார்ஷா அபேயவர்த்தனு, செயலாளர் திரு. நந்தலால் பெர்ணுண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் 65 நாடுகளைச் சேர்ந்த மொத்தம் 324 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மாநாடு முடிந்த பின்னர் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

### முச்சந்தி முரளி



இந்தியாவும் இப்படியே சொல்லிக் கொண்டிருக்க வேண்டியது தான், நாங்களும் நாளாந்தம் ஆள் ஆளாச் சுடுபட்டு செத்துக் கொண்டிருக்க வேண்டியது தான்.

## மட்டக்களப்பில் பெரும் தேடுதல்

### 50 பேர் விசாரணையில்

யாழ்ப்பாணம், டிச. 30

மட்டக்களப்பு நகரில் நேற்று பொலீஸ் கொமாண்டோக்கள் பெரும் தேடுதலை நடத்தினர். காலை 11-30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை தேடுதல் நடந்தது.

50 பேர் வரையில விசாரணைக்காக கல்லடி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் பெரும்பாலோர் நடுத்தர வயதினர்கள்.

## பிரஜைகள் குழுக்களுக்கு அழைப்பு

நல்லூர், டிச. 30

சுதுமலை, மானிப்பாய், அரியாலை ஆகிய பகுதிகளில் நடந்த அசம்பாவிதங்கள் பற்றி நேரடியாகக் கேட்டறிவதற்காக அவ்வப்பகுதிப் பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகள் இன்று அழைக்கப் பட்டுள்ளனர்.

யாழ் பிரஜைகள் குழு செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் மேற்கண்ட அழைப்பை விடுத்தார்.

யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத் தெருவிலுள்ள பிரஜைகள் குழுக்களின் காரியாலயத்திற்கு இன்று காலை 9 00 மணிக்கு சமுகம் கொடுக்கும்படி பிரஜைகள் குழுக்கள் கேட்கப்பட்டுள்ளன

## விளையாட்டை ரசித்தவர் கத்திவெட்டுக்கு இலக்கானர்

யாழ்ப்பாணம், டிச. 30

உதைபந்தாட்டப் போட்டியை ரசித்துக் கொண்டிருந்த ஒருவரை இனந்தெரியாத நபர்கள் பாளைக் கத்தியால் தாக்கினராம். இச்சம்பவம் நேற்று மாலை தாவடியில் இடம் பெற்றது.

இந்தபோட்டி தாவடி மேற்கு பத்திரகாளி கோயில் மைதானத்தில் நடைபெற்றது.

பொன்னர் பத்மநாதன் என்ற 22 வயது இளைஞன் போட்டியை ரசித்துப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

போட்டி முடிவடையும் தறுவாயில், இனந்தெரியாத இரண்டு பேர் பத்மநாதனை பாளைக் கத்தியால் வெட்டினராம்.

தலை, முதுகுப்புறங்களில் பலத்த வெட்டுக் காயங்களுடன் பத்மநாதன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். உடனடியாக அவருக்கு அவசர சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது.

பழைய கோபமே இந்த தாக்குதலுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

### சுபநேரம்

**30 - 12 - 1985**

திங்கட்கிழமை

சுபநேரம்:
12-29 முதல் 1-59 வரை
ராகுகாலம்:
7-59 முதல் 9-29 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த

# உதவி தபால் அதிபர் சுட்டுக் கொலை!

### அக்கரைப்பற்றில் நேற்றுச் சம்பவம்

அக்கரைப்பற்று டிச. 30

அக்கரைப்பற்று தபால் நிலையத்தைச் சேர்ந்த உதவி தபால் அதிபர் கே. விஞயகமூர்த்தி (வயது 32) நேறறுமாலை இனந்தெரியாத நபர்களினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று மாலை 4 30 மணியளவில் அக்கரைப் பற்று ஆலடிச் சந்தியில் அவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அவர் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஆட்சேபித்து நேற்று முன்தினம் (சனிக்கிழமை) அக்கரைப் பற்றில் நடத்தப்பட்ட ஊர்வலம் தொடர்பான ஏற்பாடுகளில் இவர் அதிக ஈடுபாடு காட்டினர் எனச் சந்தேகிக்கப் படுகிறது.

## அழுது கொண்டிருந்த ஆறுமுகம் குடும்பம்

### விடு போக உதவிய உள்ளங்கள்

யாழ்ப்பாணம், டிச. 30

நிர்க்கதியான மலையக ஏழைக் குடும்பம் ஒன்றுக்கு இளைஞர்கள் சிலர் கைகொடுத்து உதவினர்கள்.

இது பற்றிய விவரம் வருமாறு;

கனகராயன்குளத்தைச் சேர்ந்தவர் திரு. ஆறுமுகம்.

சுகயீனம் காரணமாக கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர், நிலைமை மோசமாகவே யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

பின்னர் யாழ். ஆஸ்பத்திரியிலிருந்தும் அவர் ஊருக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

கையிலே பணம் இல்லை. போதாக் குறைக்கு வருத்தம் வேறு. எப்படி கனகராயன்குளம் போவது?

ஆறுமுகம் குடும்பம், யாழ் ஆஸ்பத்திரியின் வீதி ஓரத்தில் இபபடி அழுத வண்ணம் இருந்ததை மூன்று இளைஞர்கள் கண்டனர். விசாரித்தனர்.

சிறிது நேரத்தில் 500 ரூபா பணத்துடன் வந்து அக்குடும்பத்திடம் கொடுத்தனர்.

அவர்களை அடுத்த நாள் காலை 8 மணி வவுனியா பஸ்ஸில் இரண்டு இளைஞர்கள் ஏற்றியும் விட்டனர்.

இளைஞர்கள் அந்தளவு விரைவாக உதவுவதற்கு வகை செய்தவர்கள் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பரோபகார சிந்தையுள்ள சில வர்த்தகர்களே.

## ★ அவர் பேசலாம் நாம் பேச முடியாது

யாழ்ப்பாணம், டிச. 30

அவர் பேசலாம்!
நாம் பேசமுடியாது!!

யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சுரேந்திரன் நச்சினர்க்கினியனின் கொக்குவில் இல்லத்துக்கு வழங்கப்பட்டுள்ள தொலைபேசி, இப்படியான தடையை விதித்துள்ளது.

வீட்டில் இருந்தபடி டாக்டர் நச்சினர்க்கினியன் வெளியாருடன் பேசமுடிகின்றது.

வெளியார் அவருடன் பேசமுடியாதுள்ளது.

இதன் காரணமாக யாழ் ஆஸ்பத்திரியில் அவசர தேவைகளுக்காக டாக்டர் நச்சினர்க்கினியனுடன், ஆஸ்பததிரி அதிகாரிகள் தொடர்பு கொள்ள முடியாது உள்ளது.

இப்புதுவிதமான தொலைபேசிச் சேவை, ஒன்று இரண்டு தினங்களாக அல்ல, கடந்த ஒரு மாதகாலமாகவே தொல்லை பேசும் சேவையாக இருந்து வருகின்றதாம்.

## கண்ணி வெடி அகற்றப்பட்டது

திருகோணமலை, டிச 30

கந்தளாய்—அல்லை வீதியில்சித்தாறு என்னும் இடத்தில் புதைத்து வைக்கப்பட்ட மூன்று கண்ணி வெடிகளை ஆயுதப் படையினர் அகற்றினர்.

ஒரு கண்ணி வெடி அகற்றப்படும் சமயத்தில் வெடித்து விட்டது.

ஆனால் ஆட்சேதமோ, பொருள்சேதமோ ஏற்படவில்லை.

இதைத் தொடர்ந்து சுற்றுவட்டாரத்தில் ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

# நிலாவெளியில் 10 பேர் சனியன்று சுட்டுகொலை

திருகோணமலை, டிச 30

நிலாவெளி, கும்புறுப் பிட்டியில் நேற்று முன் தினம் ஆயுதப்படையினர் நடத்திய பெரும் தேடுதல் வேட்டையின் போது பத்து பேர் கொல்லப்பட்டனர்.

நூற்றிற்கும் அதிகமானேர் கைது செய்யப் பட்டார்கள்.

கவச வாகனங்கள் சகிதம் சென்ற நூற்றுக் கணக்கான ஆயுதபபடையினர் அப்பகுதியைச் சுற்றி வளைத்தனர். சல்லடை போட்டு தேடுதல் நடத்திஞர்கள்.

காலையில் தொடங்கிய தேடுதல் வேட்டை மாலை வரை நீடித்தது.

ஆயுதப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பத்து தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

மரணமானவர்கள் போராளிகள் என திருகோணமலை பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்ட தமிழர்கள் பௌத்த யாத்திரிகர் விடுதியில் உள்ள முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அனைவரும் ஆயுதப் படையினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர்.

# மன்னர் வெறிச்சோடிக் கிடக்கிறது

### ★ கண்ணிவெடியில் படைவீரர் மரணம் ★ ஜீப்புகள் கவசவாகனங்கள் சேதம்

யாழ்ப்பாணம், டிச. 30

சனிக்கிழமை இடம் பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து மன்னர் நேற்றும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

கடைகள் மூடப்பட்டு இருந்தன.

சனிக்கிழமை நடந்த கண்ணிவெடிச் சம்பவத்தில் ஒரு ஆயுதப்படை வீரர் மரணமானர். 3 படைவீரர்கள் காயமடைந்தனர். இவ்வாறு பாதுகாப்புப் படை வட்டாரங்களிலிருந்து தெரிய வந்தது.

காயமடைந்த வீரர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னரில் இருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் தெரிவிக்கப்படுவதாவது;-

பரப்புக்கடந்தான் பாலத்தடியில் கண்ணி வெடி ஒன்று வைக்கப் பட்டிருந்தது. ஆயுதப் படையினர் மூன்று ஜீப்புகளை முன்னே விட்டு தாம் நடந்து வந்தனர். அந்த ஜீப் வண்டிகள் கண்ணி வெடியில் சிக்கி சேதமாயின. கவச வாகனங்களும் சேதமடைந்தன.

அதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் இரு பக்கங்களில் இருந்தும் கேட்டன.

இதே வேளை பரப்பக் கண்டல் முற்றுகையின் போது அப்பகுதி கர்த்தர் கோயிலில் சேதம் ஏற்பட்டதாகவும் சொல்லப்பட்டது. செய்தி எழுதப் படும்வரை விவரம் கிடைக்கவில்லை.

## நீரோடைக்குள் நிற்கவிட்டு சுட்டனர்

### நத்தார் தினப் பயங்கரத்தை விவரிக்கிறர் இளம்பெண்

— திருமலை மாவட்டச் செய்தியாளர். —

திருகோணமலை, டிச. 30

நத்தார் தினத்தன்று மூதூரில் ஊர் காவல் படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட இரண்டு திருமணமாகாத தமிழ் இளம் பெண்கள், ஒரு தமிழ் இளைஞன் ஆகியோருக்கு நடந்தது என்ன?

மயிரிழையில் உயிர்தப்பிய 22 வயதான இளம் பெண் பெலிஸியா லாஸரஸ் மயிர்க்கூச்செறியும் சம்பவத்தை உதயன் செய்தியாளரிடம் விவரித்தார்.

கிறிஸ்மஸ் தினத்தன்று பெலிஸியா, மேரி அக்னஸ், யேசுதாஸன் ஆகிய மூவரும் ஊர் காவல் படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் அவர்கள் நிலை மர்மமாக இருந்தது.

பெலிஸியா லாஸரஸ் தனது தலையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக்குத் தற்சமயம் திருமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பெலிஸியா மேலும் சொன்னதாவது:

சம்பவ தினம் இரவு 8 மணியளவில் 6 ஊர் காவல் படையினர் வீட்டுக்கு வந்தனர்.

இராணுவம் எம்மைத் தேடுவதாகக் கூறி ஊர் காவல் படையினர் எம்மை அழைத்துச்சென்றனர்.

என்னுடன் மேரி அக்னஸ், யேசுதாஸன் ஆகியோரும் வந்தனர்.

கொஞ்சத்தூரம் எம்மை அழைத்துச்சென்றனர். பின்னர் ஒரு நீரோடைக்குள் இறங்கும்படி கட்டளை இட்டனர்.

நாம் அனைவரும் இறங்கினேம். அப்போது எம்மை நோக்கி ஊர்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## மரண விசாரணை இன்று

### ஊர்காவல் படை வீரர்கள் கடற்படையிடம் ஒப்படைப்பு

திருகோணமலை, டிச. 30

ஊர்காவல் படையினரால் மானபங்கப்படுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கூறப்படும் இளம் பெண் சம்பந்தமான மரண விசாரணை, இன்று நடத்தப்படும்.

இறந்தவர் பெயர் மேரி அக்னஸ், வயது 20 திருமணமாகாதவர்.

நத்தார் தினத்தன்று இவருடன் கடத்திச் செல்லப்பட்ட பெலிஸியா லாஸரஸ் என்ற இன்னெரு தமிழ்ப் பெண், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சிகிச்சைக்காக திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்த பெண்ணின் சடலம், பெரிய பாலம் என்ற இடத்தில் காணப்பட்டது.

பதில் நீதிவான் திரு. எம் கே. செல்லராசா நேற்று அந்த இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

இதனிடையில், இச்சம்பவம் தொடர்பாக ஆறு ஊர்காவல் படையினர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு மேல் விசாரணைக்காக கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டனர்.

ஊர்காவல் படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட 16 வயதான யேசுதாஸன் என்ற இளைஞனுக்கு என்ன நடந்தது என்பது இன்னும் தெரியவில்லை.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனோரமாவுக்கு வாழ்வு அளித்தவர் பாலாஜி!

ஆயிரம் படங்களைத் தாண்டிவிட்ட நடிகை மனோரமா இன்றும் தமிழ்த் திரையுலகில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து வைத்திருக்கிறார்.

இவருக்கு வாழ்வளித்தவர்களில் தயாரிப்பாளர் பாலாஜி முக்கியமான ஒருவர் எனக் குறிப்பிடுகிறார்.

அவர் இது பற்றிக் குறிப்பிடுகையில், "படத் தயாரிப்பாளர் பாலாஜி தன் படங்களில் எனக்கு எப்படியாவது ஒரு கதாபாத்திரத்தை உருவாக்கிச் சந்து கொண்டு இருக்கிறார்.

அவரது படங்கள் என்றால் நான் அதில் இல்லாமல் இருப்பதில்லை. பிறமொழிப் படங்களைத் தமிழில் உருவாக்கும் உரிமையை பெற்றதும், அதில் ஆண் கதாபாத்திரத்தைப் பெண்ணாக்கி என்றாலும் அதில் நடிக்க வைத்து விடுவார்.

எனக்குத் தரப்படுகின்ற கேரக்டர் பற்றி டைரக்டருடன் விவாதித்து, அதற்கு மெருகு ஊட்டுவார்.

அதனால் தான் அவரது தயாரிப்பில் 'பர்மா பாப்பா' போன்ற என் கதாபாத்திரங்கள் புகழ் பெற்றன.

பாலாஜியின் மற்றொரு தயாரிப்பில்நான்பாம்பு வளர்க்கும் பெண்ணாக நடிக்க நேர்ந்தது.

பாம்புக் கூடையுடன் படத்தில் நடமாடுவதைவிட, அதைக்

**தினசரி சினிமா**

கழுத்தில் மாலைபோல் அணிந்து கொண்டு 'சிவபெருமான் போஸ்' கொடுத்து நடமாடினால் நகைச்சுவையாக இருக்கும் என்று அவர் எதிர் பார்த்தார்.

அதை அவர் என்னிடம் தெரிவித்தார். ஆனால் எனக்கோ பாம்பை அணிந்து கொண்டு நடனம் ஆடுவதற்குப் பயமாக இருந்தது.

ஆனாலும் பாலாஜியின் எதிர்பார்ப்பை எதிர்க்க இயலாமல் அப்படியே நடனம் ஆடச்சம்மதித்தேன்" என்றார்.

## அணுசக்தி எரிபொருள் பாகிஸ்தானுக்கு இல்லை

### கனடா அறிவிப்பு

இஸ்லாமாபாத், டிச. 29

பாகிஸ்தானுக்கு அணுசக்தி எரிபொருள்களை கனடா இனிமேல் விநியோகிக்காது

கனடா வெளிநாட்டு அமைச்சர் திரு. ஜோ கிளார்க் இஸ்லாமாபாத்தில் வைத்தே இத்தகவலை வெளியிட்டார்.

அணுசக்தி கூட்டுறவு சம்பந்தமாக கனடாவின் கடுமையான நிபந்தனைகளை பாகிஸ்தான் ஏற்றுக் கொள்வது போல் தெரியவில்லை என்றும் கனடா அமைச்சர் சொன்னார்.

பாகிஸ்தான் – கனடா அணுசக்தி கூட்டுறவு உடன்படிக்கை 1976இல் முறிந்தது.

பாகிஸ்தானில் உள்ள அணுசக்தி நிலையங்களைப் பார்வையிட கனடாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டதே உடன்படிக்கை முறிவுக்குக் காரணமாகும்.

## இளம் நாதஸ்வர வித்துவானுக்கு பொன்னாடை

வட்டுக்கோட்டை, டிச30

இன்றையகால கட்டத்தில் இளம்கலைஞர்களை நாம் அனைவரும் ஊக்கப்படுத்தவேண்டும். இளம் கலைஞர்களது வாழ்வுவளமானதாக அமைந்தால் தான் அவர்கள் ஈடுபடும் கலைத்துறையும்மேலோங்கும்.


இளம் நாதஸ்வர வித்துவான் திரு. வி. கே. நம்பிராஜனுக்கு அளித்த பாராட்டு வைபவத்தில் தலைமையுரை நிகழ்த்திய இந்து வாலிபர் சங்கத் தலைவர் திரு. ஜி. சிதம்பரநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கரத்தைஇந்துவாலிபர் சங்கத்தினர் இதனை நடத்தினர்.

சங்கரத்தைஇந்துவாலிபர் சங்க முன்னாள் தலைவர் திரு நா. இரத்தினசிங்கம், இளம் நாதஸ்வரக்கலைஞர் திரு வி. கே. நம்பிராஜனுக்கு பொன்னாடை போர்த்து அவரது திறமையைப் பாராட்டினார்.

திரு. சி. சபாநாதன் உட்பட மற்றும் பலரும் இங்கு பாராட்டுரை வழங்கினர்.

## மக்கள் முகம்



### நிர்வாகிகள்

சுன்னாகம், டிச. 30

தெல்லிப்பளை செல்வா ஐக்கிய கலாசார நிலைய புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடந்தது.

புதுவருட தலைவராக திரு. செபமாலை சொலமன், செயலாளராக திரு. எஸ். சிறிதரன் பொருளாளராக திரு. க. திவாகரன் ஆகியோரும், ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

### சைவ சமய பாதுகாப்பு சபை

யாழ்ப்பாணம், டிச. 30

வதிரி சைவ சமய பாதுகாப்புச் சபை டாக்டர் எஸ் மாசிலாமணி தலைமையில் வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

போஷகர்கள்:- சி. வல்லிபுரம் (சைவப்புலவர்) திரு. வ. க. இராசையா (ஆசிரியர்)

தலைவர்:- திரு. ஆ. க. கதிரேசன். உபதலைவர்:- திருமதி சந்திரலேகா பேரின்பநாயகம். செயலாளர்:- திரு. மு. க. கமலாகரன். உபசெயலாளர்:- திருமதி. சந்திரா கமலாகரன். பொருளாளர்:- திருமதி. தவமணி பாலேந்திரன். கணக்குப் பரிசோதகர்:- திரு. எம். எஸ். பேரின்பநாயகம். திருவாளர்கள்:- க. லோகநேசன். இ. யோகராசா, மா. பாலேந்திரன். இ. முரளிதரன், செல்விகள்:- சிலம்புச்செல்வி மாசிலாமணி, நளினி சோமசுந்தரம், யாவரும் ஏகமனதாக நியமனஞ் செய்யப்பட்டனர்.

அணு ஆயுத யுத்தத்தில்

# முதல் அடி கொடுக்கவே நட்சத்திர திட்டம்

## அமெரிக்கா மீது ரஷ்யா தாக்கு

மாஸ்கோ, டிச. 29

அமெரிக்காவின் நட்சத்திரப் போர்த் திட்டம், ஒரு அணு ஆயுத யுத்தம் ஏற்பட்டால் முதல் அடியை அமெரிக்கா கொடுக்க வேண்டும் என்பதற்காகவே உருவாக்கப்பட்டது.

இப்படி ரஷ்யா விமர்சித்துள்ளது.

'பிராவ்டா' பத்திரிகையில் முதலாவது பிரதி பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் பெட்ரோவ் இது பற்றி கட்டுரை ஒன்று எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையிலேயே இப்படிக் கூறப்பட்டது.

அமெரிக்கா, நட்சத்திரப் போர்த்திட்டத்தை தயாரித்துள்ளதன் நோக்கம் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு அல்ல. ஏனைய நாடுகளில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தவே இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வழமைக்கு மாறாக அணு ஆயுதங்களை பெருமளவு தயாரித்துக் குவிப்பதிலும் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

ஜெனிவா உச்சி மாநாட்டில் ஆயுத பரிகரணம் குறித்து அடைந்த முன்னேற்றத்தைத் தகர்க்கும் முயற்சிகளில் அமெரிக்காவின் சில பிரிவுகள் ஈடுபட்டுள்ளன.

இப்படி பிரதி அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## எரிமலை மீண்டும் குமுறுகிறது

சிசிலி, டிச. 29

சிசிலி நாட்டில் எட்னா எரிமலை மீண்டும் குமுறிக் கொண்டிருக்கின்றது.

எரிமலையில் இருந்து குழம்பு வெளியேறிக் கொண்டு இருக்கின்றது. நிலநடுக்கம்பூமி அதிர்ச்சி ஆகியவற்றினால் ஒரு ஹோட்டல் தரை மட்டமாகியது. ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்தஎரிமலை 1983இல் கடைசியாக வெடித்தது. அச்சமயம் 129 தினங்களாக குழம்பு வெளியேறி வீடு, வாசல்கள், பொலீஸ் நிலையம், சமய வழிபாட்டுத் தலங்களை எல்லாம் அழித்து விட்டன.

## தந்தை இறக்கும்வரை தாதியை பிஸ்டல் முனையில் வைத்திருந்த மகன்

சான் பாப்லோ, டிச. 29

தீராத நோயினால் பீடிக்கப்பட்ட தனது தந்தை இறந்துபோகும் வரை, தாதியை பிஸ்டல் முனையில் பணயக் கைதியாக வைத்து இருந்த மகனின் கதை ஒன்று அமெரிக்காவில் இருந்து வெளியாகியுள்ளது.

எட்வர்ட் பேக்கர், வயது 69.

புற்றுநோயினால் கஷ்டப்பட்டு வந்த இவருக்கு 12 தினங்களுக்கு முன்னர் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. இருந்தும் அவர் உயிர் தப்புவது அரிதாக இருந்தது.

ஆனாலும் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த அவருக்கு மூச்சுத் திணறாமல் இருக்க குழாய் மூலம் பிராணவாயு கொடுக்கப்பட்டது.

அவரின் மகனுக்கு இதனைச் சகிக்க முடியவில்லை. இறக்கப்போகிறவர் தானே, ஏன் இப்படிக் கஷ்டப்படவேண்டும் என்று நினைத்தார்.

வார்ட்டுக்குள் நுழைந்தார். தாதியைப் பிஸ்டல் முனையில் பணயக் கைதியாக வைத்துக் கொண்டு, தந்தையின் மூக்கில் பொருத்தப்பட்ட குழாயை அகற்றிவிட்டார்.

தந்தை இறந்த பின்னர்தான் தாதியை விடுவித்தார், 37 வயதான மகன் பேக்கர்.

மகன், தந்தைக்கு ஆற்றிய உதவி எப்படி?

பொலீஸ் பாதுகாப்பில் மகன் வைக்கப்பட்டுள்ளார்.

## கார் இறக்குமதி சீனு தடை

டோக்கியோ, டிச 29

வெளிநாட்டுக் கார் இறக்குமதியை சீனா முற்றாகத் தடை செய்ய உள்ளது.

உள்ளூர் கார் உற்பத்தியை ஊக்குவிப்பதே அதன் நோக்கமாகும்.

## லேஸர் கதிர்ச் சிகிச்சை இருதயத் துடிப்பைச் சீராக்கும்

மாஸ்கோ, டிச 29

அதிகரிக்கும் இருதயத் துடிப்பை லேஸர் கதிரினால் கட்டுப்படுத்திச் சீராக்கலாம்– இப்படி சோவியத் வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

ரஷ்யாவில் ஜோர்ஜியா மாநிலத்தில் ஒரு நோயாளியை இறந்துவிட்டார் என்று வைத்தியர்கள் கைகழுவி விட்டனர்.

வைத்திய நிபுணர்களின்படி நோயாளி இறந்து 60 நிமிடங்கள் சென்ற பின்னர் அவருக்கு லேஸர் கதிர் சிகிச்சை அளிக்கப்பட்டது. இருதயத் துடிப்பு மீண்டும் ஏற்பட்டது. அந்த நோயாளி இறுதியில் உயிர் பெற்றுவிட்டார்.

இப்படி 49 இருதய நோயாளர்கள் குணமடைந்து உள்ளனர்.

அல்ஸர் நோயாளிகளை லேஸர் கதிர்ச் சிகிச்சையால் சுகமாக்கலாம் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

5 நிமிடம் லேஸர் கதிர் சிகிச்சை இதற்கு போதுமாம்.

## வெளி உலகில்

## விமானத் தாக்குதல்களுக்கும் தமக்கும் தொடர்பு இல்லையாம்

### பலஸ்தீன இயக்கம் அறிவிப்பு

ரோம், டிச. 29

மத்திய கிழக்குப் பயங்கரவாதம் இத்தாலிக்குப் பரவாமல் தடுக்க வேண்டும்.

இத்தாலிய உள்துறை அமைச்சர், அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை ரோம் சர்வதேச விமான நிலையத்திலும் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவின் சர்வதேச விமான நிலையத்திலும் வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் 17 பேர் கொல்லப்பட்டனர். 100 போ வரை காயம் அடைந்தனர்.

இத்தாக்குதல்களுக்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டுபிடிப்பதில் இரு நாடுகளின் பொலீஸாரும் ஈடுபட்டு உள்ளனர்.

இஸ்ரவேல் விமானங்களே இச்சம்பவங்களில் தாக்குதலுக்கிலக்காகின.

ரோமில் விமானத்தைத் தாக்கிய 3 பயங்கரவாதிகளில் 2 பேர் கொல்லப்பட்டனர். 1 நபர் காயங்களுடன் பிடிபட்டார். இராணுவ ஆஸ்பத்திரியில் அவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

கிரனேட்டுக்களாலும் தன்னியக்கத் துப்பாக்கிகளாலும் விமானங்கள் தாக்கப்பட்டன.

போலிப் பாஸ்போர்ட்டுடன் ஏழு வாரங்களுக்கு முன்னர் மத்திய ரோம் நகருக்குக் காயமடைந்தவர் வந்து சேர்ந்தார் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வியன்னா விமான நிலையத்தில் தாக்குதல் நடத்தியவர்களை பொலீஸார் விசாரித்து வருகின்றனர்.

லெபனானில் இருந்து ஜோர்டான் பாஸ்போர்ட்டுக்களுடன் வியன்னாவுக்கு வந்ததை இவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இவர்கள் அரபுகள் என்று பி.பி.சி. செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவங்களுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் பொறுப்பு இல்லை என்று அறிவிக்கப்படடுள்ளது.

## ஜப்பானில் 9,020 பேர் விபத்தில் பலி

டோக்கியோ, டிச 29

ஜப்பானில் இந்த ஆண்டு 9,020 பேர் வீதி விபத்துக்களில் மரணமானார்கள்.

ஜப்பானிய பொலீஸ் பகுதி இத்தகவலை வெளியிட்டுள்ளது.

மோட்டார் வாகனங்களின் பாவனை அதிகரிப்பே இதற்குக் காரணம்.

4 கோடி 56 லட்சம் நான்கு சக்கர வாகனங்களும் 2 கோடி மோட்டார் சைக்கிள்களும் 12 கோடி மக்கள் வாழும் ஜப்பானில் புழக்கத்தில் உள்ளன.

## இஸ்ரவேலின் முதலாம் நம்பர் எதிரி

டெல் அவிவ், டிச. 29

இஸ்ரவேலின் 1ம் நம்பர் எதிரி மீண்டும் பிடிபட்டார்.

ஆயுள்தண்டனை அனுபவித்து வரும் ஸ்வி கோர் என்பவரே பிடிபட்டவர்.

இஸ்ரவேலின் சரித்திரத்திலேயே பணத்துக்காக ஒரு குழந்தையைக் கடத்திக் கொலை செய்தவர் இந்த நபர்.

பணம் கொடுக்கப்படவில்லை என்றதும் பத்து வயதுப் பாலகன் ஓரோன் யாடன் கொலை செய்யப்பட்டான்.

தப்பி ஓடிய இவன் இன்டர்சிடி பஸ் ஒன்றில் பிரயாணஞ் செய்கையில் மீண்டும் பிடிக்கப்பட்டான்.

## ஆப்கான் பிரச்சினை றேகன் கருத்து

வாஷிங்டன், டிச 29

ஆப்கான் பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும். இப்படி அமெரிக்க அதிபர் றேகன் கேட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானுள் 6 ஆண்டுகளுக்கு முன்னர் ரஷ்ய துருப்புக்கள் ஊடுருவல் நடத்தியதையும் அதிபர் றேகன் கண்டித்தார்.

## ஆயுள்வேத ஆய்வு ஜேர்மனி - இந்தியா கூட்டாக நடத்தும்

பூனா, டிச 29

ஆயுள்வேதம் பற்றி ஆராய்ச்சிகள் நடத்த மேற்கு ஜேர்மனியும் இந்தியாவும் கூட்டுக் குழு ஒன்றைஅமைத்துள்ளன.

இக் குழுவில் இந்தியாவில் இருந்து இரண்டு நிபுணர்களும் மேற்கு ஜேர்மனியில் இருந்து இரண்டு நிபுணர்களும் அங்கம் வகிப்பர்.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# மாநகர சபை, நகர சபை நிதி ஒதுக்கீடு செய்வதில் புதிய முறை

கொழும்பு, டிச. 30

மாநகர சபை, நகர சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் புதிய முறை ஒன்றைக் கடைப்பிடிக்க உள்ளூராட்சி அமைச்சு முடிவு செய்துள்ளது.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் செயல்பாடுகளை தனித்தனியே கணித்து நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று உலக வங்கி நிபுணர்கள் குழு இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

அதைத் தொடர்ந்தே உள்ளூராட்சி அமைச்சு நிதிஒதுக்கீடு செய்வதற்கு புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

அதன் படி,

● ஒதுக்கப்பட்ட நிதி குறிப்பிட்ட காலத்துக்குள் சரிவரப் பயன்படுத்தப்பட்டுள்ளதா?

● நிறைவேற்றப்பட்ட திட்டத்தால் வரியிறுப்பாளர்கள் பயனடைந்து உள்ளார்களா?

● சிக்கனமானமுறையில் பணம் செலவிடப்பட்டதா?

ஆகியவற்றைஅமைச்சு அதிகாரிகள் பரிசீலனை செய்வர். பின்னர் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் புள்ளிகள் வழங்கப்படும்.

திறமையாகச் செயல்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கூடுதல் புள்ளிகள் கிடைக்கும்.

அதன்படியே உள்ளூராட்சி அமைச்சு, மாநகர சபை, நகரசபைகளுக்கு வருங்காலத்தில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு, நன்கொடைகள் வழங்கப்படும்.

## பூசை முடிந்து வந்தவர்களுக்கு கொச்சைத் தமிழில் புத்திமதி

மட்டக்களப்பு, டிச. 30

ஆயுதப் படையினரின் சோதனையின் போது விசாரணைக்குட்படுத்தப்பட்ட இளைஞர்கள் சிலருக்கு ஆயுதப்படையினர் புத்திமதி கூறினர்.

மட்டக்களப்பு நகரிலுள்ள இந்து ஆலயமொன்றில் திருவெம்பாவைப்பூசை முடிந்து வீடு திரும்பியவர்களே இந்தப் புத்திமதியைக் கேட்க நேரிட்டது

சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது:

வீதிகளில் சோதனையை மேற்கொண்ட படையினரால் ஆலய பூசை முடிந்து திரும்பியவர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் நாகரிக உடையணிந்த இளைஞர்கள் சிலரும் அடங்கினர். விசாரணையின்போது நாம் ஆலயம் சென்று திரும்புவதாக இளைஞர்கள் தெரிவித்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் படையினர் கொச்சைத் தமிழில் "கோவிலுக்குப் போவதென்றால் களிசான் செருப்போட போறதில்லைதானே. வேட்டிதானே உடுக்க வேண்டும்." என்றனர்.

## ஹாட்லி கல்லூரியின் தனித்துவம் பாதுகாக்கப்படும்

### பழைய மாணவர் கூட்டத்தில் உரை

பருத்தித்துறை, டிச30

ஹாட்லிக் கல்லூரியின் தனித்துவத்தையும், கல்வி விளையாட்டு பாரம்பரியத்தையும், புதிய அதிபர் திரு. பொ. பாலசிங்கம் தொடர்ந்து பாதுகாத்துக் கல்லூரியை வளர்ப்பார் என்ற நம்பிக்கை எம் அனைவருக்கும் உண்டு.

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் ஏ. பாலகிருஷ்ணன் கூறினார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஆர். உருத்திரா தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே டாக்டர் பாலகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், வணக்கத்துக்குரிய ஹாட்லி அவர்களால் ஹாட்லிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் தலைசிறந்த கல்விமான்களையும் நிர்வாகத் திறமை கொண்டவர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் விளையாட்டுத்துறை [illegible] என்றார்.

## பாதிக்கப்பட்ட வாடிகளுக்கு நிவாரணம்

மட்டக்களப்பு, டிச,30

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் – முஸ்லிம் கலவரத்தால் பாதிக்கப்பட்டு இதுவரை நிவாரண உதவி கிடைக்காத வயல் வாடிகளுக்கு தலா 1000ரூபா வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்விடயம் தொடர்பாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரிடம் பிரஸ்தாபித்திருந்தார்.

இதனை அடுத்தே நிவாரண உதவி சுமார் 2000 [illegible] வழங்கப்படுகின்றன.

## துப்பாக்கி பிரயோகம்

மட்டக்களப்பு, டிச.30

மட்டக்களப்பு அரசடி சந்தியில் வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

ஆயுதப்படையினர் நிறுத்துமாறு கட்டளையிட்டபோதுஅதனை மீறிச் சென்றதையடுத்தே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்திலிருந்து தப்பி வேகமாகச் சென்றுவிட்டதாகத் தெரிய வருகிறது.

## இயக்கங்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிச. 30

யாழ் நகரில் நடைபாதையில் வியாபாரம் செய்பவர்களினால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பெரிய ஆஸ்பத்திரிக்குச் செல்லும நோயாளிகளும் விபத்தில் சிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஆயுதப் படையினரைக் கண்டு மக்கள் பயந்து ஓடும்போது நடைபாதை தடைப்பட்டிருப்பதால் மக்கள் வாகன விபத்தில் சிக்குகிறார்கள்.

விடுதலை இயக்கங்கள் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். — இப்படிக் கோரும் பிரசுரங்கள் யாழ்நகரில் வெளியிடப்பட்டுள்ளன.

## யாழ். பஸ் நிலையம் 'பிரதான வீதி' ஆக மாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 30

யாழ் பஸ்நிலையம் 'பிரதான வீதி' யாக மாறி விட்டதோ!

இந்த ஐயம், பஸ் நிலையத்துக்குச் செல்பவர்கள் மனதில் ஏற்பட்டுள்ளது.

மினிபஸ்கள், கார்கள், மோட்டார் சைக்கிள், சைக்கிள்கள், ஓட்டோரிக்ஷோ எல்லாம் பஸ் நிலையத்தை 'தாராளமாக' பாவிக்கத் தொடங்கியுள்ளன.

இதன் காரணமாக பஸ் பயணிகள் படும் கஷ்டங்கள் சொல்லுந்தரமன்று.

இதனால் சிறு விபத்துக்களும் ஏற்படுகின்றன.

கடந்த சனிக்கிழமை இளம் பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் மோதி சிறுஉரசல் காயத்துடன் வீடு திரும்ப வேண்டியதாயிற்று.

ஆஸ்பத்திரிக்குச் செல்லும் கர்ப்பிணிகள் பஸ்களில் இருந்து இறங்கிபடும் அவஸ்தைப் பார்க்க முடியாதுள்ளது.

'பஸ் நிலையம்' பஸ் நிலையமாகக் காட்சியளிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உண்மையே உனை உயர்த்தும் ஏணி, எப்போதும் உண்மை பேசினால் உன் வாழ்வு உயர்வு அடையும், பொய் பேசின் வாழ்க்கை நரகமாகி விடும்.

-- அண்ணல் காந்திஜி

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073
30-12-85 த. பெ. 23

## சிக்கலிலிருந்து மீள்வதற்கு இ. தொ.கா என்ன செய்யும்?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆரம்பிக்க உத்தேசித்திருந்த பிரார்த்தனை, தியானத் திட்டம் பெரும் சிக்கல் நிலையை அடைந்திருக்கிறது.

அந்தத் திட்டத்தை எப்படியும் நசுக்கி விட வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத் துறையில் எழுந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

பிரார்த்தனை, தியானத்தில் ஈடுபடும் தோட்டத் தொழிலாளர்கள் தமது வேலை இடங்களுக்குப் பிந்தியே வருவார்கள். அப்படிப் பிந்தி வருவதால் உற்பத்தி பாதிக்கப்படும் உற்பத்தி குறைந்தால் வருமானம் குறையும் வருமானம் குறைந்தால், வேலை செய்யாதவர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்குப் பணத்துக்கு எங்கே போவது?

இப்படிக் காரணம் காட்டி, வேலைக்குப் பிந்தி வரும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வெட்டப்படும் என்று அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையும் அறிவித்திருக்கின்றன.

அரசாங்கத் தோட்ட நிர்வாகத்துறை மட்டுமன்றி, அரசாங்க சார்பு தோட்டத் தொழிற் சங்கங்களும், இ. தொ. கா. வின் உத்தேச திட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கத் திடசங்கற்பம் பூண்டிருக்கின்றன.

இ தொ கா. அங்கத்தவர்கள் பிரார்த்தனைக்குச் சென்று விட்டு நேரம் தாமதித்து வேலைக்கு வந்தும் அவர்களுக்கு முழு நாள் சம்பளம் வழங்கப்பட்டால், நாமும் காலையில் வேலைக்குத் தாமதித்தே வருவோம். இவ்வாறு அரசு சார்பு தொழிற் சங்கங்கள் தெரிவித்திருக்கின்றன தொழிற் சங்கங்களுக்கு இடையே இவ்வாறு ஏட்டிக்குப் போட்டி உருவானால் நிலைமை சிக்கலாவதை விட வேறு வழியில்லை.

அதன் மூலம் தோட்டத் தொழில் முழுவதும் பாதிக்கப்படும். அவ்வாறு பாதிக்கப்படும் பட்சத்தில் நாட்டின் பொருளாதாரம் தொப்பெனக் கீழே விழுந்து விடும். இதனை அரசு அனுமதிக்குமா?

பொங்கல் திருநாள் தொடக்கம் தமது தொழிலாளர்கள் பிரார்த்தனை, தியானத்தில் ஈடுபடுவார்கள் என்று இ. தொ.கா. அறிவித்த போதே அது நாட்டின் பொருளாதாரத்தில் பெருந் தாக்கத்தை உண்டுபண்ணும் என்று அனுமானிக்கப்பட்டது.

ஆனால் நாட்டின் பொருளாதாரத்துக்கு முட்டுக்கட்டை போடவேண்டும் என்ற நோக்கம் எதுவும் தமக்கு இல்லை என்று இ.தொ.கா. வின் தலைவரும் அமைச்சருமான திரு. தொண்டமான் தெரிவித்திருந்தார்.

மலையக மக்களுக்கும், தேசிய சிறுபான்மையினருக்கும் நியாயம் வழங்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்தும் சாத்வீகப் போராட்டத்தின் முதற்கட்டமே பிரார்த்தனைத் திட்டம் என்றும் அவர் கூறியிருந்தார்.

அந்தத் திட்டத்தை அறிவித்த பின்னர் திரு. தொண்டமான் இரண்டு, மூன்று தடவைகள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்தித்தார். அப்போது சம்பளவெட்டுக் குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இ. தொ. கா. வின் தலைவரோ அல்லது பொதுச் செயலாளரோ நாட்டில் இல்லாத நேரத்தில் பிரார்த்தனையில் ஈடுபடும் தொழிலாளருக்கு சம்பளம் வெட்டப்படும் என்ற மிரட்டல் வந்திருக்கின்றது.

பிரார்த்தனை, தியானத்தில் ஈடுபடும் தொழிலாளருக்குச் சம்பள வெட்டு என்ற தீர்மானம் நடைமுறைக்கு வந்தால் இ. தொ கா அங்கத்தவர்களின் ஜீவனோபாயம் என்னவது? தொழிலாளர்களைப் பட்டினி போட்டுக் கொண்டு தியானமும், பிரார்த்தனையும் செய்ய முடியுமா?

தாங்கள் திட்டமிட்டவாறு தியானம், பிரார்த்தனைகளை தோட்டப் பகுதிகளில் நடத்துவதற்கு இ. தொ. கா. வினருக்கு இரண்டு மார்க்கங்கள்தான் உண்டு.

1. உத்தேச திட்டத்தை தொழிற் சங்கப் போராட்டமாக மாற்றுவது.

2. அரசு, தொழிலாளர்களின் சம்பளத்தை வெட்டினாலும் அதனை காங்கிரஸின் நிதியிலிருந்து வழங்கி அரசாங்கத்துக்கு ஒரு பாடம் புகட்டுவது.

இ தொ. கா. இதில் எதனைச் செய்யும்?

முதலாவது வழியைக் கைக் கொண்டால் அது சாதாரண தொழிற்சங்க நடவடிக்கையாகி விடும். அரசியல் கலப்பு எதுவும் அதில் இருக்க மாட்டாது.

தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்த இந்தப் போராட்டத்தை நடத்துவதுதான் இ. தொ. கா வின் உண்மையான நோக்கம் என்றால், அது இரண்டாவது மார்க்கத்தைத் தான் நிச்சயம் கைக்கொண்டாக வேண்டும். செய்யுமா?

# இந்தியாவின் வலிமைக்கு கல்பாக்கம் அணு நிலையம்

தமிழ் நாட்டிலே சமயவரலாற்றுச் சிறப்பு மிக்க மகாபலிபுரத்துக்குத் தெற்கே கல்பாக்கத்தில் 250 ஹெக்டர் நிலப் பரப்பில் அமைந்துள்ள அணு மின்சக்தி நிலயத்துக்கு "இந்திரா காந்தி அணுசக்தி ஆராய்ச்சி நிறுவனம்" என்றுபெயர் சூட்டப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் இரவு 10.02 மணிக்கு இந்த நிறுவனத்தில் 14 மெகவட் உயர் சக்தி அணுமின் உலை இயக்கப்பட்டது.

இதன் பயனாக இத்துறையில் சாதனை ஏற்படுத்திய ஏழாவது உலக நாடு என்ற சிறப்பினை இந்தியா பெற்றுள்ளது. அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், மேற்கு ஜேர்மனி, ஜப்பான் ஆகியவை ஏனைய ஆறு நாடுகளாகும்.

இச்சாதனை நிகழ்ந்ததும் பல வெளிநாட்டுத் தூதரகங்களின் விஞ்ஞானப் பிரிவுகள் இவை பற்றிய விவரங்களை இந்தியாவிடம் கோரியுள்ளன.

அணுசக்தித் திட்டத்தின் கீழ் இந்தியா நிலைநாட்டி உள்ள சாதனை, உலக அரங்கில் விஞ்ஞான தொழில்நுட்ப வரலாற்றுத் துறைகளில் மட்டுமன்றி சர்வதேச அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பல வல்லரசுகள் மலைத்துப் போயுள்ளன. இச்சாதனை சர்வதேச அரசியலில் ஏற்படுத்தவுள்ள தாக்கம் பற்றி பல நாடுகளின் நிபுணர்கள் ஆராயத் தொடங்கி உள்ளார்கள்.

இந் நிறுவனத்தின் பணிப்பாளராக திரு. சி. வி. சுந்தரம் கடமை ஆற்றுகிறார். இவர் தலைமையின் கீழ் விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும் பதின்மூன்று ஆண்டுகள் ஆற்றிய அரும்பணியின் விளைவே இச் சாதனை ஆகும்.

இச் செயற்பாட்டுக்கு புளுடோனியம் எரிபொருளாகும். முதற் கட்டம் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஆரம்பமாகியது. இந்த நூற்றாண்டு இறுதியில் இந்தியாவில் பத்தாயிரம் மெகவட் அணு ஆற்றலை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற திட்டத்தின் ஓர் அம்சமே இச்சாதனை ஆகும்.

கல்பாக்க செயற்பாட்டின் முதற் கட்டத்தைப் பொறுத்தவரையில் முதலாண்டில் மட்டும் 126 கோடி 40 லட்சம் மெகவட் அலகுகள் உற்பத்தி ஆகின. ஒவ்வொரு கிலோவாட் மின்சக்தியும் 42 பைசாவுக்கு தமிழ் நாடு மின்சார சபைக்கு விற்பனை ஆகியது. விற்பனைமூலம் கடந்த ஆண்டு 150 கோடி சம்பாதிக்கப்பட்டது. ஏழாவது ஆண்டுத் திட்டத்தில் இது 1400 கோடி ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டு உள்ளது.

இங்கு பயன்படுத்தப்படும் சிறிய 235 மெகவட் இயந்திரம் வளர்ந்து வரும் நாடுகளுக்கு மிகவும் பொருத்தமானவையாகக் காணப்படுகிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளோ பாரிய 900 மெகவட்-1300 மெகவட் இயந்திரங்களைத் தமது இடங்களில் பயன்படுத்துவதைக் காண்கிறோம்.

இத்துறையில் இந்திய அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் பெறுவதற்கு இந்தோனேஷியா, எகிப்து, லிபியா, அல்ஜீரியா போன்ற நாடுகள் முன்வந்துள்ளன. சுமார் இருபத்தைந்து நாடுகள் இந்தியாவின் இயந்திர அமைப்பினைப் பயன்படுத்தலாம் என்று சர்வதேச அணுசக்தி நிறுவனம் இருபத்தைந்து நாடுகளுக்குச் சிபார்சு செய்து உள்ளது.

> கல்பாக்கம் அணுமின் நிலையம் அண்மையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியினால் திறந்துவைக்கப்பட்டது. தெற்காசியாவிலேயே மிகப் பெரிய அணுமின் நிலையமாக இது கருதப்படுகின்றது.
>
> இது பற்றிய விபரங்களை இக்கட்டுரையில் திரு. வி. வரதசுந்தரம் தொகுத்துத் தருகின்றார்.

இவ்வாண்டு ஜூலை மாதம் இலங்கையும் ஈடுபாடு காட்டியது. இலங்கை ஜனாதிபதியின் விஞ்ஞான ஆலோசகர் கலாநிதி சிறில் பொன்னம்பெருமா தலைமையில் இந்தியா சென்ற தூதுக்குழு இந்தியா இத்தகைய திட்டம் ஒன்றை இலங்கையில் அமைத்துத் தரும் சாத்தியக் கூறுகள் பற்றி இந்திய விஞ்ஞானிகளின் ஆலோசனைகளைப் பெற்றது.

எனவே ஏற்றுமதி வாய்ப்புகளும் இந்தியாவுக்கு ஏற்பட்டு வருகின்றன. இலங்கையின் வேண்டுகோள் பற்றி இந்திய அணுசக்தி ஆணைக்குழுத் தலைவர் கலாநிதி இராஜா இராமண்ணா பின்வருமாறு விளக்கி உள்ளார்:-

"ஏற்றுமதி செய்யும் அபிலாஷைகள் இந்தியாவுக்கு இல்லை. இருப்பினும் இலங்கையின் விஷயம் வேறு வகையானது. அது எமது அயல் நாடு. அவர்களுக்கு உதவி வழங்குவது லாபம் கருதி அல்ல. பெரும் முதலீடுகளைச் செய்யும் வசதியில்லாத சிறிய அயல் நாட்டுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். எனது வயதினருக்கு பழைய நாட்களில் இலங்கை, புதுடில்லியிலும் பார்க்க நெருக்கமானதாக இருந்தது" என்று சொன்னார்.

இந்திய அணுசக்தித் திட்டத்தின் தந்தை என்று கலாநிதி ஹோமி பாபா வர்ணிக்கப்படுகிறார். அவருடைய முயற்சிகளுக்கு ஆரம்ப காலத்தில் பண்டிட் நேரு பரிபூரண ஒத்துழைப்பினை வழங்கினார். அவரைத் தொடர்ந்து அன்னை இந்திரா காந்தி ஊக்கம் கொடுத்து இதனைவளர்த்தார். அணுசக்தி ஆராய்ச்சியிலும் செயற்பாட்டிலும் இந்தியா ஏறுநடை போடவேண்டும் என்று கனவு கண்டு பாரிய முயற்சிகளை மேற்கொண்ட அன்னை இந்திராவின் பெயர், ஆராய்ச்சி நிறுவனத்துக்குச் சூட்டப்பட்டமை மிகவும் பொருத்தமானதே.

அமைதி, சமாதானத்துக்குக் குந்தகம் விளைவிக்காத முறையில் அபிவிருத்தி முயற்சிகளுக்கு அணுசக்தி பயன்படுத்தப்படும் என்ற இந்தியாவின் உறுதிப்பாடு உலக மக்களுக்கு நம்பிக்கைதரும் செய்தியாகும்.

## மட்டக்களப்பு யாழ் பஸ் ஆசன பதிவு

மட்டக்களப்பு டிச 30

மட்டக்களப்பு — யாழ்ப்பாண இ. போ. ச. பஸ் ஆசன பதிவு வேலைகள் பிரயாணத்திற்கு முதல் நாள் அன்றே செய்யப்படுமென மட்டக்களப்பு இ. போ. ச. அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பிட்ட தினம் பஸ் புறப்படாவிட்டால் மறுநாள் புறப்படும் பஸ்ஸிற்கு அந்த ஆசன வசதி ஒதுக்கப்படும். எக்காரணம் கொண்டும் ஆசன பதிவுக்கட்டணம் திருப்பி வழங்கப்பட மாட்டாது.

பத்து லட்சம் வீடமைப்பு திட்டத்தின் கீழ்

## யாழ். மாநகர சபைக்கு ரூ. 60 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், டிச. 30

பத்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1986ஆம் ஆண்டில் யாழ். மாநகர சபைக்கு 60 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தைப்பயனுள்ள வழிகளில் பயன்படுத்த மாநகர மக்கள் முன்வரவேண்டும் என்று மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

10 லட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 1985 இல் உள்ளூராட்சி அமைச்சு 30 லட்சம் ரூபாவைத்தான் யாழ் மாநகரசபைக்கு ஒதுக்கியது. 1986இல் 60 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

* வாளி மல கூடங்களை நீரடைப்பு கூடங்களாக மாற்றவும்.

* வீடுகள் திருத்தவும் – இத் திட்டத்தில் இருந்து பொதுமக்கள் கடன்பெற முடியும்.

சட்ட விரோதமாக மின்சாரத்தைப் பாவிப்பவர்கள் கூட, இத் திட்டத்தின் கீழ் கடன் பெற்று சட்டத்துக்கு உட்பட்ட முறையில் மின்சார விநியோகத்தைப் பெறலாம்.

இத்தகவல்கள் பொது மக்களுக்குக் கிடைக்கப் பயன் பெற பத்திரிகைகள் உதவ வேண்டும் – இப்படி மாநகர ஆணையாளர் திரு. சிவஞானம் குறிப்பிட்டார்.



**பொய்யாமொழி**

**குறள்:**
மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற.

**பொருள்:**
ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்கவேண்டும்; அறம் அவ்வளவே; மனத் தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத்தன்மை உடையவை

## எமது பிரதேச மூலவளத்துக்கு ஏற்ப உற்பத்தி வேண்டும்

### கைத்தொழில் அபிவிருத்தி அங்குரார்ப்பண வைபவத்தில் உரை

நல்லூர். டிச. 30

எமது பிரதேசத்தின் மூலவளங்களுக்கு ஏற்ப நாம் எமது உற்பத்திகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

அரியாலை மகளிர் கிராம அபிவிருத்திச்சங்க கைத்தொழில் அபிவிருத்தி அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். கோபாலரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

திருமதி பா. வேல்முருகு தலைமையில் வைபவம் நடைபெற்றது.

மேலதிகஅரசாங்க அதிபர் திரு.எஸ். கோபாலரத்தினம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவகுருநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றிவிழாவை ஆரம்பித்து வைத்தனர்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் மகளிர் அபிவிருத்திச் சங்கத்திற்கு 10,000 ரூபாபெறுமதியான காசோலையைக் கையளித்துஅங்குமேலும் உரையாற்றுகையில்:

நல்லூர்ப் பகுதியில் உள்ள கிராம அபிவிருத்திச்சங்கங்களைவிட அரியாலை கிராம அபிவிருத்திச்சங்கம் திறமையாகவும் நேர்மையாகவும் செயலாற்றுகிறது என்றார்.

இவர்கள் பணி மேலும் தொடர்ந்து பல யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

திருமதி எஸ். சுப்பிரமணியம், பிரதேச அபிவிருத்தி முகாமையாளர் திரு என். சோமசுந்தரஐயர் பனம்பொருளபிவிருத்திச்சபை முகாமையாளர் டாக்டர் எஸ் மோகனதாஸ், அபிவிருத்திச்சங்கச் செயலாளர் திரு. எஸ். கருணைநாதன், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகச்செயலாளர் திரு ஆ. கனகசபாபதி, வணபிதா ஜோசப் அடிகளார், தமிழ் மகளிர் அவைப் பேச்சாளர் திரு. இராமுருகையா ஆகியோர் உரையாற்றினர்.

கணவன்மாரை இழந்த ஐந்து பெண்களுக்கு நல்லூர் உதவி அரசாங்க உதவி அதிபர்திரு எஸ். சிவகுருநாதன் தையல் பயிற்சியையும் ஆரம்பித்துவைத்தார்.

கைத்தொழில் கண்காட்சியும் இடம் பெற்றது. சனிக்கிழமை இவ்வைபவம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்டர்சிற்றி தாமதம்

யாழ்ப்பாணம், டிச.30

இன்டர்சிற்றி ரயில் நேற்று ஒன்றரை மணித்தியாலம் தாமதமாகவே யாழ் ரயில் நிலையம் வந்து சேர்ந்தது.

## மகாவெலிகம கிராமத்தில் 500 அகதிகள்

திருகோணமலை, டிச, 30

வாகரையில் உள்ள சுமார் 500 தமிழ் அகதிகள் சேருவிலத் தொகுதியில் உள்ள மகாவெலிகம என்ற கிராமத்துக்கு அரச அதிகாரிகளினால் அழைத்துவரப்பட்டனர்.

தற்சமயம் அவர்கள் அனைவரும் மகாவெலிகம பாடசாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

## சிவதர்ம வள்ளல் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிச.30

இடைக்காடு சனசமூக நிலையத்தின் நூல்நிலையத்துக்கு இரண்டு பெரிய அலுமாரிகளைப் பிரபல தொழிலதிபரான சிவதர்மவள்ளல்திரு.க.கனகராசா அன்பளிப்புச் செய்தார்.

ஆசிய பவுண்டேசன் அன்பளிப்புச் செய்த நூல்களை வைக்க அலுமாரிகள் இல்லாது இருந்து வந்த குறை இதனால் நீங்கியது.

இது சம்பந்தமான வைபவம் சமாதான நீதவான் திரு. ச. க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

## கடையில் இல்லாதபாண் விதியில் கிடந்தது

நல்லூர், டிச. 30

பாவனையாளர் சங்கத்தினர் கடை ஒன்றுக்குள் சென்று பாண் கேட்ட போது அந்தக் கடைக்காரர் பாண் இல்லைஎன்று கை விரித்தாராம்.

ஆனால் அந்தக்கடைக்கு அருகில் உள்ள வீதி ஓரத்தில் 20 இறாத்தல் பாண் அனாதரவாக வீசப்பட்டுக் கிடந்தது.

இந்த அனுபவம் நல்லூர் பாவனையாளர் சங்கத்துக்கே ஏற்பட்டது.

மட்டக்களப்பில் ரோந்து

## கண்ணிவெடிக்கு ஈடு கொடுக்கக்கூடிய கனரக வாகனங்கள்

மட்டக்களப்பு, டிச30

மட்டக்களப்பு பகுதியில் கடமையாற்றும் பொலிஸ் அதிரடிப்படையினருக்கு கனரகரோந்து கவசவாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாதாரண கவசவாகனங்களைவிட மிக சக்தி வாய்ந்த இவ் வாகனங்கள் இறென் அமைப்புடையவை.

இந்த கவசவாகனங்கள் கண்ணிவெடித் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கக் கூடியவை என ஆயுதப் படை வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

## வித்தாரம்

என்ன முரளி! வழமையான சந்தனப் பொட்டைக் காணயில்லை. இன்னும் கோயில் பக்கம் போகயில்லையோ! இனித்தானோ?

திருவெம்பாவை என்டதிலை பத்துநாளா விடிய நாலு மணிக்கே எழும்பின உனக்கு. அது முடிஞ்சு போட்டுதெண்டு இப்ப அலுப்பு வந்திட்டுது போலை!

உலகம் முன்னேற முன்னேற கலியுகமும் மாறுது. இப்பதான், இன்னமாதத்திலை இன்ன பருவகாலம் எண்டு சொல்ல ஏலாதே. கோடை காலத்திலை மழை பொழிஞ்சு தள்ளும், மாரிமழை ஊத்த வேண்டிய காலத்திலை வெய்யில் அனலாய்அடிக்கும். கோடையிலும் பனி வரும், மாரியிலும் பனி வரும்!

இரண்டு மூண்டு நாளா சின்னச்சின்ன மழைபெய்திது. இராத்திரிப் பாத்தியே எப்பிடிப் பனி கொட்டினதெண்டு. அதுவும் எங்கடை தமிழ் ஆக்கள் முந்தின காலத்திலை எழும்பிற வைகறைப் பொழுதிலைதான் சில் எண்டு நடுங்கிச்சுது.

அந்த பனிக் குளிராலை நேரத்துக்கு எழும்ப முடியாமல் கிடக்கு. அதிலை தான் நீயும் நேர காலத்தோடை எழும்பாமல் "லேட்" அடிக்கிறாய் எண்டு எனக்குத் தெரியும்.

வைகல் எண்டால் நாள். வைகறை எண்டால் நாள் பிறக்கும் சாமம். இதுகளை பழந் தமிழ் இலக்கியங்கள் தான் சொல்லுதப்பா! முந்திய அதாவது மிக மிக முந்திய காலங்களிலை தமிழ் மக்கள் எல்லாம் வைகறையிலேயே நித்திரையாலை எழும்பிவிடுவினம். இப்ப அப்பிடியே நடக்குது! சூரியன் உதிக்கயன்னல் கிருதியாலை வந்து சுட்டதுக்குப் பிறகும் பல பேர் எழும்புறயில்லை. வீட்டுக்காரப் பெடியன் தேத்தண்ணி குடிக்கச் சொல்லிப்போய் படுக்கையிலை புரட்டினாலும் சில பேருக்குப் பெரிசாக் கோபம் வரும். அப்பிடியான வை என்னெண்டு வைகறைப் பொழுதிலை எழும்புவினம்? எல்லோரும்இப்பிடி இருந்தா என்னெண்டு நாடு செழிப்படையும்? மக்கள் சந்தோஷமாய் வாழமுடியும்?

அட, இந்த முறைத் திருவெம்பாவைப் பற்றி ஏதோ சொல்ல வேணும் எண்டு நினைச்சனான். பிறகு உந்த வித்தாரம், விண்ணனம் எல்லாம் வந்து சேர்ந்திட்டுது.

என்ன செய்யிறது பழக்க தோஷம்!

திருவெம்பாவை எல்லாக்கோயிலிலையும் பத்து நாள் நடக்கிறதுதான வழக்கம். ஆனால் யாழ்ப்பாணத்தின்ரை வடக்குப் பக்கமாய் உள்ள ஒரு ஊரிலை ஒரு கோயிலை ஆறும் திருவிழாவோடை திருவெம்பாவை முடிஞ்சு போச்சுதாம். அதைச் சரியாச் சொல்லுறதெண்டா கதவடைப்புத்தான்!

சந்தைக்குப் பேர் போன ஊர் அது. அங்கை உள்ள அந்த ஆலயம் பழமைப் பிரசித்தி பெற்றதாம்.

வழக்கமாய் ஆறும் திருவிழா செய்யிறவைதான் இம்முறையும் உபயம் செய்யிறதுக்கு எல்லா ஆயித்தமும் செய்தவையாம் பொங்கிப் படைச்சு பூசகர் வந்து பூசை தொடங்கிற நேரத்திலை கோயில் உரிமையாளர் எண்டு சொல்லிக் கொண்டு ஒருத்தர் அங்கை வந்து "சன்னதம்" ஆடினாராம். இவ பூசையிலை கரடி நுழைஞ்சது எண்டு சொல்லுவினம் எல்லோ. அது

(4-ஆம் பக்கம் பார்க்க)

கோண்டை

யாழ்நகரில்
மற்றுமோர் அங்கீகரிக்கப்பட்ட கடதாசிக் கூட்டுத்தாபன விற்பனையாளர்கள்
கங்கா என்ரபிறைஸஸ்
338, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22408
40 பக். — 1 குரேஸ் ரூபா 200
60 பக். — 1 குரேஸ் ரூபா 280
கையிருப்புக்கு முந்துங்கள்!

# உதயன்

30 - 12 - 1985

எம்மிடம் கூட்டுத்தாபனத்தின்
சகல விதமான
* காகிதாதிகளும்
* அப்பியாசக் கொப்பிகளும்
கூட்டுத்தாபனத்தின் விலைக்கே பெற்றுக்கொள்ளலாம்!
கங்கா என்ரபிறைஸஸ்
338, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22408

# அவசர அவசரமாக 43,000பேருக்கு குடியுரிமை

## இலங்கை அரசு ஏற்பாடு

கொழும்பு டிச 30

43 ஆயிரம் இந்திய வம்சாவளியினருக்கு அவசர அவசரமாக இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட இருக்கிறது. ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் உத்தரவு ஒன்றின் பேரில் அதற்கான நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக் குடியுரிமை பெறத் தகுதியுடைய இந்திய வம்சாவளியினரே இவர்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமியக் கைத்தொழில் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவுடன் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இந்த உத்தரவு.

இந்த உத்தரவை அடுத்து குடியுரிமை வழங்குவது தொடர்பான பூர்வாங்க வேலைகள் முடுக்கி விடப்பட்டிருப்பதாக குடிவரவு குடியகல்வு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் குடியுரிமை பெறத் தகுதியுடையவர்கள் அனைவருக்கும் முதலில் குடியுரிமை வழங்கப்படும்.

அதன் பின்னர் நாடற்றவர் என்ற அடிப்படையில் மீதியும் 93 ஆயிரம் பேர் தொடர்பான விடயத்தை இலங்கை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும் என அந்த அதிகாரி தெரிவித்தார்.

## பாதசாரி படுகாயம்

யாழ்ப்பாணம், டிச. 30

ஓட்டுமடத்தில் மினிவான் மோதியதால் பாதசாரி ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமாலை இச்சம்பவம் இடம் பெற்றது.

காயமடைந்தவர் பெயர் நடராசா சுப்பிரமணியம், வயது 42. தொழிலாளி.

ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

## நீரோடைக்குள் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காவல் படையினர் சுட்டனர்.

சூடு ஒன்று என் தலையிலும் தாக்கியது. மேரி அக்னஸ் சூட்டுடன் நீரினுள் விழுந்தாள். அவள் இறந்திருக்க வேண்டும் என்று அஞ்சுகின்றேன். யேசுதாசன் சூட்டுடன் ஓடி விட்டான். அவன் என்ன ஆனான் என்பது தெரியவில்லை.

பின்னர் இரண்டு ஊர் காவல்படை யினர் என்னை இழுத்துக்கொண்டு, அருகில் இருந்த பள்ளிக்கூடத்துக்குச் சென்றனர்.

அங்கு வந்த அந்த இரண்டு ஊர் காவல் படையினரும் என்னை மானபங்கம் செய்தனர் அதன்பின் என்னை விட்டுவிட்டனர்.

தலையில் காயத்துடன் நான் மூதூர் ஆஸ்பத்திரிக்கு வந்தேன். அங்கு இருந்து திருமலை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்கள்.

என்மீது பலாத்காரம் பாவித்த இரண்டு ஊர் காவல் படையினரையும் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

இப்படி செலினியா லாஸரஸ் கண்ணீர் மல்க சொன்னார்.

யாழ். ஆஸ்பத்திரியில்

# நோயாளர்களின் உயிர் காப்பது யார்?

## வைத்தியர்களா, மின்சார சபையா என்று ஒரு சந்தேகம்!

யாழ்ப்பாணம், டிச.30

யாழ். ஆஸ்பத்திரியில் நோயாளர் உயிர்காக்கும் பொறுப்பு யாரைச் சேர்ந்தது?

வைத்தியர்களா, மின்சார சபையா என்ற ஒரு சந்தேகம் இப்போது எழுந்திருக்கிறது.

உயிர்காக்க வைத்தியர் இருந்தாலும் அவசர சிகிச்சைக்கருவியை அவர் இயக்குவதற்கு மின்சாரம் இல்லாத நிலை அடிக்கடி ஏற்படுகிறது.

இது இப்போது 'உயிரை வாங்கும்' பிரச்சினை ஆக மாறியிருக்கிறது.

மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவதாலும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைப் பிரிவுகள் ஒழுங்காக இயங்குவதற்குத் தடையாக உள்ளன.

வெள்ளி, சனிக்கிழமைகளில் நடத்தப்படும் வெளிநோயாளர் இருதய நிபுணத்துவ சிகிச்சைப் பிரிவே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

இப் பிரிவுக்கான மின்சார விநியோகம் கடந்த இரண்டு மாதகாலமாகவே அடிக்கடி தடைப்படுகின்றதாம்.

இதன் காரணமாக இருதய நோயாளர்களை உரிய சாதனங்களைக் கொண்டு நன்றாகப் பரிசோதனை செய்யாது திருப்பி அனுப்பும் நிலை வைத்திய நிபுணர்களுக்கு ஏற்படுகின்றது.

இது நோயாளர்களின் 'உயிரைப் பறிக்கும்' செயலாகவும் சில சமயங்களில் அமைந்து விடுகின்றதாம்.

மின் கோளாறு காரணமாக அந்தப் பகுதிக்கான தண்ணீர் விநியோகமும் தடைப்படுகிறது.

மின்சாரம், தண்ணீர்க் குறைபாடுகள் பற்றி ஆஸ்பத்திரி நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்தும் பலனளிக்கவில்லையாம்.

## மட்டக்களப்பு மின்கம்ப மரணங்கள்

# மூவரது சடலங்களும் அடையாளம் காணப்பட்டன

மட்டக்களப்பு, டிச,30

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் மின்கம்ப மரண தண்டனை பெற்ற மூவரது சடலங்களும் நேற்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டன.

செங்கலடி, சந்தியில் காணப்பட்ட சடலம் இணையடி வாசியான முருகன் சரஸ்வதி (30 வயது) என்பவருடையது ஆகும்.

சத்துருக்கொண்டான் சந்தியில் காணப்பட்ட சடலம் அதேயிட வாசியான யூலியட் இராஜரத்தினம் (28 வயது) என்பவருடையது.

ஞானதரியம் சதுக்கம் சந்தியில் காணப்பட்ட சடலம் வைத்தியசாலை சந்தி வாசியான மெய்யப்பன் சீதாலட்சுமி (42 வயது) என்பவருடையது. பதுளையைப் பிறப்பிடமாகக்கொண்ட இப்பெண் 1983 ஜூலைக் கலவரத்தின் போது இடம்பெயர்ந்து மட்டக்களப்பு வந்தவர் ஆவர்.

இந்த மரணங்கள் தொடர்பான மரண விசாரணையை நகரமரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் நடத்தினார். முடிவில் மூன்று மரணங்களும் கொலைகள் எனத் தீர்ப்புவழங்கப்பட்டது.

## அமெரிக்க - ரஷ்ய நேரடி விமானச்சேவை

மாஸ்கோ,டிச30

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே நேரடி விமானப் போக்குவரத்துச் சேவை 1986 இல் ஏப்ரல் 27ஆம் திகதி ஆரம்பமாகும்.

ரஷ்யாவின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் இத்தகவலை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

# இவர்களின் பேச்சு இப்படி ஒளிபரப்பாகிறது

மாஸ்கோ, டிச. 29

அமெரிக்க அதிபர் றேகன் ரஷ்ய மக்களுக்கும்—

ரஷ்ய அதிபர் திரு. கோர்பச்சேவ் அமெரிக்க மக்களுக்கும்—

டெலிவிஷன் மூலம் ஒரே சமயத்தில் உரை நிகழ்த்த உள்ளனர்.

புதிய வருடத்தை முன்னிட்டு ஜனவரி 1 ம் திகதி ரஷ்ய டெலிவிஷன் அமெரிக்க அதிபர் றேகனின் பேச்சை ஒளி பரப்பும்.

ரஷ்ய அதிபர் திரு. கோர்பச்சேவின் பேச்சு பதிவு செய்யப்பட்ட வீடியோ கஸட், அதே நேரத்தில் அமெரிக்க ஒளிபரப்பு நிலையத்தினால் ஒளிபரப்பப்படும்.

## வித்தாரம்

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

போலைத் தான்.

பூசகரையும் விரட்டி, மூலஸ்தானக் கதவுகளையும் படார் எண்டு அடித்துப் பூட்டிப் போட்டு, பெரிய ஆவேஷ லெச்சரும் அடிச்சாராம் அந்த ஆசாமி.

ஆரும் திருவிழா செய்யிற பகுதி ஆக்கள் இனிமேல் கோயிலுக்கு வர முடியாது. கிணத்திலை தண்ணி அள்ள மடியாது, எண்டு சொல்லிப் போட்டுப் போயிட்டாராம்.

அட கடவுளே! உன்ரை சன்னிதியிலையும் இப்பிடி பிரிப்புகள், பிரிவினைகளோ!

இந்தச் சில்லறைக் குழுங்கள் எப்ப எங்களை விட்டுப் போகுதோ அப்பதான எங்களுக்கு விமோசனமப்பா!

## இராணுவச் சட்டம் நீக்கம்

ராவல்பிண்டி, டிச. 29

பாகிஸ்தானில் நடைமுறையில் உள்ள இராணுவச் சட்டம் நாளை திங்கட்கிழமையோடு நீக்கப்படுகிறது

இது குறித்து ஜனாதிபதி ஸியா – உல் – ஹக் இன்று நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார்.

கடந்த ஏழரை வருடங்களாக பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நடந்து வந்தது.

## கடற்படை வீரருக்கு ஏற்பட்ட கதி

திருகோணமலை, டிச. 30

தோணி ஒன்றில் உல்லாச சவாரி சென்ற கடற்படை வீரர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை (ஞாயிறு) திருமலைக்கு அருகில் உள்ள கல்முட்டியாங்குளத்தில் இடம் பெற்றது

இறந்த கடற்படைவீரரின் பெயர் ஜி. டபிள்யு. ரோஹன, வயது 24.

திடீர் மரண விசாரணை அதிகாரி ஜனாப் அலி அக்பர் விசாரணை நடத்தினார்.

விபத்து மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

# கன்னியாவில் கைதான இரு தமிழ் இளைஞருக்குஎன்ன நடந்தது?

## பிரஜைகள் குழு விசாரணை

திருகோணமலை,டிச30

கன்னியாவில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழ் இளைஞர்களின் நிலை என்ன?

அவர்கள் உயிருடன் இருக்கின்றனர்களா?

இதுபற்றி விசாரித்துத் தகவல் தரும்படி இளைஞர்களின் பெற்றோர்கள் திருகோணமலை பிரஜைகள் குழுவிடம் நேற்றுக் காலை முறையிட்டனர்.

நவம்பர் 8 ஆம் திகதி கைதான இந்த இளைஞர்களின் பெயர்கள் வருமாறு:

1. காளிமுத்து சிவநாதன், வயது 15.
2. சோமசுந்தரம் குணரத்தினம், வயது 16.

இந்த இளைஞர்கள் குறித்து திருமலை பிரஜைகள் குழு, ஆயுதப்படையினருடனும் அரசாங்க அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

## சிங்கப்பூரில் 75 000 பேர் வேலை இழப்பு

சிங்கப்பூர், டிச 29

சிங்கப்பூரில் இந்த ஆண்டு 75,000 பேர் வேலை இழந்தனர்.

இதில் 50,000 பேர் வெளிநாட்டவர். 20,000க்கு அதிகமானோர் சிங்கப்பூர்வாசிகள்.

வெளிநாட்டவர்களில் பெரும்பான்மையோர் இந்தியர்கள்.

வேலை வாய்ப்புக்கள் குறைந்து வருவதே இதற்குக் காரணமாகும்.

கடந்த 10 ஆண்டுகளில் வேலைவாய்ப்புகள் நிறைந்து காணப்பட்டன.

சிங்கப்பூரின் பொருளாதாரம் எதிர்வரும் மாதங்களில் மோசமான நிலைமையை அடையலாம் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

1988 வரை இந்த நிலைமை நீடிக்குமென்று தெரிகின்றது

இதன் காரணமாக இன்னும் பலர் வேலை இழக்க ஆகக்கூடும் பட்டுள்ளது.

## அக்கரைப்பற்றில் கைது செய்யப்பட்ட உதவி தபால் அதிபர் எங்கே?

மட்டக்களப்பு, டிச. 30

அக்கரைப்பற்றில் ஆயுதப் படையினரின் முற்றுகையின்போது கைது செய்யப்பட்ட உதவி தபால் அதிபர் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவலைப் பெற முடியாது அவரது குடும்பம் துயரத்தில் தவிக்கின்றது.

அவரைப் பற்றிய தகவல்களைப் பெற்று அவரை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும்—

அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் அம்பாறை—கல்முனை கிளைச் செயலாளர் தபாலதிபர் திரு. இ. திருநாவுக்கரசு தனது தாய்ச்சங்கத்திடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மகஜர் ஒன்றையும் தாய்ச்சங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

மகஜரில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

கடந்த 22. 12. 1985 இல் அக்கரைப்பற்று கிராமத்தை முற்றுகையிட்ட அம்பாறை இராணுவ வீரர்களால் கைது செய்யப்பட்ட 100க்கு மேற்பட்டவர்களில் அக்கரைப்பற்று தபால் நிலைய உதவி தபால் அதிபர் திரு. கே. சிவலிங்கமும் அடங்குவார்.

அவர் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவலைப் பெறமுடியாத நிலையில் அவரது குடும்பம் தவிக்கின்றது.

அரச ஊழியர் கைது செய்யப்படும்போது அப்பகுதி பொலீஸ் அதிகாரி அல்லது நம்பிக்கைக்குரிய பிரமுகர்களின் அனுசரணையுடன் செயல்படும் பட்சத்தில் அவ் ஊழியர் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதனை விடுத்து படையினர் மனம் போன போக்கில் நடந்து கொள்வதால் எத்தனையோ அப்பாவி ஊழியர்களுக்கு உயிரிழப்பு, உடைமை இழப்பு ஏற்படுகிறது.

இந்த நிலையில் தாய்ச் சங்கம் தலையிட்டு மேற்படி ஆலோசனைகளை அரச மட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தனது மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

## 100 மூடை சிமெந்து அபகரிப்பு

மட்டக்களப்பு டிச. 30

மட்டக்களப்பு செங்கலடி நீர்ப்பாசன திணைக்கள களஞ்சியம் மீண்டும் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டது.

சுமார் 100 மூடை சிமெந்து கொள்ளை அடிக்கப்பட்டது.

வாகனமொன்றில் ஆயுதபாணிகளாக வந்த நபர்கள், காவலாளிகளை கட்டி வைத்த பின்பே இக்கொள்ளையை நடத்தினர்.

# விளையாட்டரங்கு

இரண்டாவது டெஸ்ட்

# இந்திய அணிக்கு வெற்றி கிட்டுவது உறுதி

மெல்போர்ன், டிச. 30

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெறுவது நிச்சயமாகிவிட்டது.

இன்று காலையில் நடைபெறும் ஐந்தாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றியை தன் வசப்படுத்திக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலியா வீரர்கள் தமது விக்கெட்டுகளை நேற்றைய ஆட்டத்தில் தொடர்ந்து கோட்டை விட்டதால் அவர்கள் தோல்வியை தழுவும் நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

கடைசியாக நடைபெற்ற இரண்டு டெஸ்ட் தொடர்களில் இங்கிலாந்திடமும் நியூஸிலாந்திடமும் ஆஸ்திரேலியா படுதோல்வியடைந்தது தெரிந்ததே.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. தற்போது இரண்டாவது டெஸ்டில் தோல்வியை எதிர் கொள்ளும் நிலையில் ஆஸி அணி இருக்கிறது.

இந்த ஆட்டத்தின் நான்காம் நாள் ஆட்டம் நேற்று மெல்போர்ன் மைதானத்தில் நடைபெற்றது.

நேற்றைய ஆட்டமும் தொடர்ந்து இந்திய வீரர்களின் கைவசமே இருந்தது. இந்திய பந்து வீச்சாளர்கள் நேற்றைய ஆட்டத்தில் தமது ''ஆட்சி'' யைத் தொடர்ந்து செலுத்தினர்கள்.

9 விக்கெட் இழப்புக்கு 431 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி நேற்று 445 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அதைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தனது நிலையை மேலும் கோட்டை விட்டது.

நேற்று ஆட்டம் முடிவுற்றபோது ஆஸி அணி 8 விக்கெட்டுகளை இழந்து 228 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

ஆஸி தரப்பில் அணித் தலைவர் அலன் போர்டர் ஆட்டமிழக்காமல் பெற்ற 98 ஓட்டங்கள் நேற்றைய ஆட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

இந்திய பந்து வீச்சாளர்கள் தரப்பில் ரவி சாஸ்திரி மீண்டும் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர், கபில் தேவ் 2 விக்கெட்டுகளையும் சிவராமகிருஷ்ணன், ஷிவ்லால் யாதவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்கள்.

இன்றைய ஆட்டம் இந்தியாவின் வெற்றித் தினமாக இருக்கும்.

மல்லாகத்தில்

# நவீன விளையாட்டு மைதானம்

## கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பெருமுயற்சி

யாழ்ப்பாணம்,டிச30

மல்லாகத்தில் சகல வசதிகளையும் கொண்ட நவீன விளையாட்டு மைதானம் ஒன்றை நிறுவும் முயற்சயில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

சங்கத் தலைவர் திரு. எஸ் ஸ்ரீ பாஸ்கரன் இத் தகவலைத் தெரிவித்தார்.

மைதானத்துக்காக சங்கம் பதின்மூன்று பரப்புக் காணியை விலையாக வாங்கியுள்ளது.

ஐந்து பரப்புக் காணி நன்கொடையாக கிடைத்திருக்கிறது.

இன்னும் 40 பரப்புக் காணி வரை சங்கம் வாங்க திட்டமிட்டிருக்கிறது.

சாயோடை பகுதியில் அமைய உள்ள இவ்விளையாட்டு மைதானத்துக்கு நான்கு திசைகளில் இருந்து பாதைகள் அமைக்கப்படும்.

சர்வதேசப் போட்டிகளை நடத்தக் கூடிய அளவு தரம் வாய்ந்ததாக இம்மைதானம் அமைக்கப்படும். நீச்சல் தடாகம் அமைப்பதும் இத்திட்டத்தில் அடங்கியுள்ளது.

இப்படி சங்கத் தலைவர் திரு ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்தார்.

# பௌத்த யாத்திரிகர் விடுதி இராணுவ முகாமாக மாற்றம்

திருகோணமலை,டிச.30

திருகோணமலை நகரில் உள்ள பௌத்த யாத்திரிகர் விடுதி, இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது.

சனிக்கிழமையில் இருந்து பாதுகாப்புப் படையினர் இவ் விடுதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

சேருவில, திரியாய்ப் பகுதிகளில் உள்ள பௌத்த தலங்களுக்கு வருகை தரும் பௌத்த யாத்திரிகர்கள், இந்த விடுதியில் தங்கிச் செல்வது வழக்கமாயிருந்தது.

இப்போது பௌத்த யாத்திரிகர் வருகை அறவே நின்றுள்ளதால் பாதுகாப்புப் படையினரின் முகாமாக மாற்றி அமைக்கப்பட்டது.

# தொழிற் சங்க துறையில் தமிழ் பெண்களின் பங்களிப்பு

## உதவி தொழில் ஆணையாளர் பாராட்டு

யாழ்ப்பாணம்,டிச30

தொழிற் சங்க துறையில் தமிழ் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத் தக்களவு இல்லை என்ற ஒரு குறைபாடு இருந்தது இதனை தமிழர் ஆசிரியர் சங்கம் பொய்ப்பித்து விட்டது.

உரிமைகளை வென்றெடுக்கும் தொழிற்சங்க பணியிலும் தமிழ் ஆசிரியைகள் முன்னிற்பதை காணும் போது மகிழ்ச்சி ஏற்படுகிறது.

உதவித் தொழில் சங்க ஆணையாளர் எஸ் சி. இராஜநாயகம் இப்படித் தெரிவித்தார்.

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம், பிரெட்றிச் ஈபேர்ட் மன்றம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியவை இணைந்து நடத்திய கருத்தரங்கு ஒன்றை அவர் தொடக்கி வைத்து உரை நிகழ்த்தினார்.

''ஆசிரியர் தொழிற் சங்கச் செயற்பாடுகளில் பெண் ஆசிரியர்களின் பங்கு'' என்ற தலைப்பில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் திரு. த. மகாசிவம் தலைமையில் நடைபெற்றது.

திரு. த. மகாசிவம் தமது தலைமையுரையில், தொழிற்சங்கத்துறையில் இன்னும் பெண்கள் பற்றிய முடிவினை ஆண்களே எடுக்கின்றார்கள் என்றார். இந்நிலை மாறவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

அச்சடுவோரும் வெளியிடுவோரும்: த-ஷபறு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட் 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி: 30-12-1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org